இணைப்பு-4

# மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்

ஊரக வளர்ச்சித் துறை
தமிழ்நாடு அரசு
ஏப்ரல் 1998.

# மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்

ஊரக வளர்ச்சித் துறை
தமிழ்நாடு அரசு
ஏப்ரல் 1998.

# பொருளடக்கம்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (4வது பட்டியலின்படி) மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்.

## கிராம ஊராட்சிகள்


| வழங்கப்பட்ட உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் | | பக்க எண். |
|---|---|---|
| 1 | வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல் | 9 |
| 2 | நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல் | 10 |
| 3 | கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை | 10 |
| 4 | மீன்வளம் | 11 |
| 5 | உணவு பதப்படுத்துதல் உட்பட சிறுதொழில்கள் | 11 |
| 6 | கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் | 12 |
| 7 | ஊரக வீட்டு வசதி | 12 |
| 8 | குடிநீர் வசதி | 12 |
| 9 | சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்துத் தொடர்புகள் | 12 |
| 10 | ஊரக மின்மயமாக்கல் | 13 |
| 11 | மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் | 13 |
| 12 | வறுமை ஒழிப்புத் திட்டங்கள் | 13 |
| 13 | கல்வி, தொடக்கக்கல்வி மற்றும் ஆரம்ப கல்வி | 13 |
| 14 | தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி | 13 |
| 15 | நூலகங்கள் | 14 |
| 16 | பண்பாடுகள் | 14 |
| 17 | சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் | 14 |
| 18 | மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள் | 14 |
| 19 | குடும்ப நலம் | 15 |
| 20 | பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு | 15 |
| 21 | மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டம் | 16 |
| 22 | பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் நலம் | 17 |
| 23 | பொதுப்பகிர்வு முறை | 17 |
| 24 | சமுதாய சொத்துகள் பேணுதல் | 17 |
| 25 | கனிம வளம் | 18 |
| 26 | விளையாட்டுகள் | 18 |

# பொருளடக்கம்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (4வது படிவத்தின்படி) மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்.

## ஊராட்சி ஒன்றியங்கள்



| வழங்கப்பட்ட உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் | | பக்க எண். |
|---|---|---|
| 1 | வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல் | 19 |
| 2 | நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல் | 19 |
| 3 | கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை | 19 |
| 4 | மீன்வளம் | 20 |
| 5 | உணவு பதப்படுத்துதல் உட்பட சிறுதொழில்கள் | 21 |
| 6 | கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் | 21 |
| 7 | ஊரக வீட்டு வசதி | 21 |
| 8 | குடிநீர் வசதி | 22 |
| 9 | சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்துத் தொடர்புகள் | 22 |
| 10 | ஊரக மின்மயமாக்கல் | 22 |
| 11 | மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் | 22 |
| 12 | வறுமை ஒழிப்புத் திட்டங்கள் | 23 |
| 13 | கல்வி, தொடக்கக்கல்வி மற்றும் ஆரம்ப கல்வி | 23 |
| 14 | தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி | 23 |
| 15 | நூலகங்கள் | 23 |
| 16 | பண்பாடுகள் | 23 |
| 17 | சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் | 24 |
| 18 | மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள் | 24 |
| 19 | குடும்ப நலம் | 25 |
| 20 | பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு | 25 |
| 21 | மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டம் | 26 |
| 22 | பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் நலம் | 27 |
| 23 | பொதுப்பகிர்வு முறை | 27 |
| 24 | சமுதாய சொத்துகள் பேணுதல் | 28 |
| 25 | விளையாட்டுகள் | 28 |

# பொருளடக்கம்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (4வது படிவத்தின்படி) மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்.

## மாவட்ட ஊராட்சிகள்


| வழங்கப்பட்ட உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் | | பக்க எண். |
|---|---|---|
| 1 | வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல் | 28 |
| 2 | நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல் | 29 |
| 3 | கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை | 29 |
| 4 | மீன்வளம் | 30 |
| 5 | உணவு பதப்படுத்துதல் உட்பட சிறுதொழில்கள் | 31 |
| 6 | கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் | 31 |
| 7 | ஊரக வீட்டு வசதி | 31 |
| 8 | குடிநீர் வசதி | 31 |
| 9 | சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்துத் தொடர்புகள் | 32 |
| 10 | ஊரக மின்மயமாக்கல் | 32 |
| 11 | மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் | 32 |
| 12 | கல்வி, தொடக்கக்கல்வி மற்றும் ஆரம்ப கல்வி | 32 |
| 13 | தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி | 32 |
| 14 | நூலகங்கள் | 32 |
| 15 | பண்பாடுகள் | 33 |
| 16 | சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் | 33 |
| 17 | மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள் | 33 |
| 18 | குடும்ப நலம் | 34 |
| 19 | பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு | 34 |
| 20 | மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டம் | 35 |
| 21 | பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் நலம் | 36 |
| 22 | பொதுப்பகிர்வு முறை | 37 |
| 23 | சமுதாய சொத்துகள் பேணுதல் | 38 |

# முகவுரை

தமிழ்நாட்டில் பழங்காலம் தொட்டு ஊராட்சி அமைப்புகள் இருந்து வந்தன என்பதற்கு அடிப்படை ஆதாரமாக உத்திரமேரூர் மற்றும் சோழர் காலத்திய கல்வெட்டுகளும், ஆவண ஆதாரங்களாக செப்புத் தகட்டுப் பாளங்களும் உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், ஊராட்சி அமைப்புகள் அதனுடைய வலுவையும் உள்உயிர் துடிப்பையும் படிப்படியாக இழந்திருந்தாலும், இழந்த வலுவைப் பெற்று நிர்வாகம் உயிர்த்தெழவும், மக்களாட்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் உயிர் நாடியாக இருப்பது திறமையான உள்ளாட்சி அமைப்புகளே என்பதை இந்த அரசு என்றும் மறந்ததில்லை.

**அறிஞர் அண்ணா** அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி கூறுகையில், **"சிற்றூராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் புதிய மக்களவையின் அடித்தளமாக அமைந்துள்ளன என்றும் சிற்றூராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நாம் வலுப்படுத்தவில்லையென்றால் நமது மக்களாட்சி வலுவானதாகவும் உணர்ச்சியூட்டுகின்றதாகவும் இருக்க முடியாது என்றும் உலக அறிவினை ஊரகப் பகுதிகளில் உள்ள நம் மக்களுக்குக் கொண்டுச் செல்ல வேண்டுமென்றும் இதைத்தவிர நமது நாட்டை வலுப்படுத்துவதற்கு வேறு வழி இல்லை"** என்று தெரிவித்துள்ளார்.

அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையின் அடிப்படையில் அமைந்த இந்த அரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபின்பு, 1996ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் உரிய பிரதிநிதித்துவத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் வழங்கி தேர்தலை நல்லமுறையில் நடத்தி சாதனை படைத்தது. புதிதாக பொறுப்பேற்றுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் மாநாட்டில் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் 30.11.96ல் உரையாற்றியபோது, **"ஊராட்சி மன்ற பிரதிநிதிகளிடம் உள்ள மக்களின் எதிர்பார்ப்பையும் அவர்கள் நேர்மையோடும் நாணயத்தோடும் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றியும் குறிப்பிடும்போது, மாநகரங்கள், நகரங்கள், பேரூர், சிற்றூர்கள் இங்கெல்லாம் வாழ்கின்ற மக்கள் இந்த அரசிடமும், உங்களிடமும் ஏராளமாக எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற தொண்டுள்ளத்தோடு நேர்மை, நாணயம் இவற்றை உயிரைவிட மேலாக மதிக்கும் தூய்மையான மனத்தோடு இந்த மக்கள் பணியில் நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். இந்த உணர்வைத்தான் உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நான் எதிர்பார்க்கிறேன்"** என்று கேட்டுக் கொண்டார்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ள கடமைகளை நிறைவேற்ற உரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இந்த அரசு பல்வேறு காலக்கட்டங்களில் பெற்ற அநுபவங்களையும், வல்லுநர்களின் கருத்துக்களையும் மனதில் கொண்டு தேவையான அனைத்து அதிகாரங்களையும் குறிப்பாக குக்கிராமங்களோடு நெருங்கியுள்ள கிராம ஊராட்சிகளின் அதிகாரங்களை வரையறுத்து வழங்கியுள்ளது. உள்ளாட்சி மன்றங்கள் மேலும்

திறம்பட செயல்பட, இடர்பாடுகளை நீக்க, மேலும் சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய அவசியம் இருப்பின், அவற்றையும் தட்டிக்கழிக்காமல் பகிர்ந்தளிக்க அரசு தயாராக உள்ளது. எனவே இதுபற்றி மேலும் சில அதிகாரங்கள் பரவலாக்க வேண்டிய அவசியம் குறித்து உயர்மட்டக் குழு மூலம் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னிடம் ஒப்படைத்துள்ளார்கள். அதன்படி இதுவரை என்னுடைய தலைமையில் இருமுறை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் இறுதியில் தேவைப்படும் அதிகாரங்களை மேலும் உள்ளாட்சி அமைப்புகள் பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. மக்களின் நல்வாழ்விற்குத் தேவையான தகவல்களை வெளிப்படையாக்கும் முயற்சியில் ஒருபகுதியாக மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரையறுக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த விவரங்கள் ஒரு கையேட்டின் வடிவில் தற்போது வெளியிடப்படுகிறது. இந்த முயற்சி அரசின் அதிகாரத்தை கடைநிலை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பகிர்ந்தளிக்கும் முயற்சியின் முதல்கட்ட பணியேயாகும். இப்பணி தொடரும். இதுபோன்ற அதிக அதிகாரங்களை கடைநிலை உள்ளாட்சிகள் வரை தங்கு தடையின்றி பகிர்ந்தளிப்பதில் இந்த அரசுதான் முதன் முதலில் செய்துள்ளது என்பது குறிப்பிட தக்கது. இத்தகைய உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் தங்கள் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி தெரிந்து, தெளிவு பெறுவதுடன் அதை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தி, சிறப்பாக செயல்படவும் இக்கையேடு பேருதவியாக இருக்குமென கருதுகிறேன்.

**கோ.சி.மணி.**
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சி துறை அமைச்சர்.

# முன்னுரை

நம் இந்திய நாடு ஓர் சமதர்ம சார்ந்த சனநாயக நாடு என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்த சனநாயகத்திற்கு அடிப்படை மக்களாட்சி ஆகும். மக்களாட்சி என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்டு செயல்படும் ஓர் அமைப்பாகும். மக்களாட்சியில் பிரதிநிதித்துவம் மேல்மட்டங்களோடு நின்றுவிடாமல் கிராமங்கள் மற்றும் குக்கிராமங்கள் வரை பரவும் வகையில் உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறு நிலைகளில் வடிவமைக்கப்பட்டன. நம் நாட்டின் அடிப்படை சாசனமான இந்தியஅரசியலமைப்புச் சட்டம் 40-வது பிரிவு கூறுகளின்படி மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்கி அவை திறம்பட செயலாற்றும் வகையில் தேவையான அதிகாரங்களையும் ஆணை உரிமைகளையும் அவற்றுக்கு வழங்க வரையறுக்கப்பட்டுள்ளது.

வேதகாலத்திற்கு முன்பிருந்தே தமிழ்நாடு நெடுங்காலமாக உள்ளூர் தன்னாட்சி முறை வரலாற்றை உடையது. உத்திரமேரூர் கல்வெட்டுப் பொறிப்பில், சமுதாயக்குழு தங்களுடைய பகுதி வளர்ச்சிக்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என்பதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. அக்காலத்தில் இது ஓரளவிற்கு ஊர்க்குடியரசு அமைப்பாக இருந்தது. 10-11 ஆவது நூற்றாண்டுக் காலத்தில் சமுதாயக் குழு, சோழர் ஆட்சியின் கீழ் தன்னுடைய உச்ச நிலையை அடைந்தது. அப்போது ஊராட்சி மன்றங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் வரிவிதிப்பு, சமுதாய மேம்பாடு, நீதி நிருவாகம் முதலியவற்றை செயற்படுத்தியது. ஊராட்சி மன்றங்களின் உறுப்பினர்களைத் தெரிவு செய்ய "குட ஓலை முறை" கமுக்கவாக்குச் சீட்டாக பயன்படுத்தப்பட்டது. பல்வேறு குழுக்கள் வாயிலாகச் சமுதாயப் பங்கெடுப்பு வலிவூட்டப்பட்டது. எனினும் ஊராட்சி மன்றங்கள், சோழ மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. சோழ ஆட்சி சரிந்ததும், இம்மாநிலம் உள்ளாட்சி தன்னாட்சியுரிமையின் வீழ்ச்சியையும், ஒருமுகப் படுத்தப்பட்ட நிலை மானிய நிருவாக முறை எழுச்சியையும் சந்தித்தது. இது, ஆங்கிலேயே ஆட்சியாளர்கள் அரசின் நிருவாக வசதிக்காகத் தொடக்கத்தில் உள்ளூர் தன்னாட்சி முறையை அறிமுகப்படுத்தும் வரை தொடர்ந்து இருந்தது.

முப்பதாண்டுகளுக்கு மேலாக மாநிலத்தில் மக்களாட்சியைப் பன்முகப் படுத்துதலில் ஏற்ற இறக்கங்களைக் காண்கிறோம். மாநிலச் சட்டப் பேரவையில் ஆழ்ந்தாராய்வு மேற்கொண்டபின், முன்னரே தெரிவித்தபடி 1958 ஆம் ஆண்டு சென்னை ஊராட்சிச் சட்டமும் 1958 ஆம் ஆண்டு சென்னை மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டமும் இயற்றப்பட்டன.

1989 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்குப்பின், 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், அரசமைப்புச் சட்டத் திருத்தம் சட்டவரைவு அறிமுகம் செய்யப் பெற்றும் அது பலனளிக்கவில்லை. இருந்தபோதிலும், 1992 ஆம் ஆண்டு, 73 ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 23.12.92 ஆம் நாள் கொண்டு வரப்பட்டது. மாநில அரசானது ஊராட்சிகள் தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் அல்லது மேற்காணும் அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கு இசைய ஊராட்சிகளுக்கு 24.4.94 ஆம் நாளுக்குள்ளாக புதிய சட்டமியற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மாநிலத்தில் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் 22.4.94 அன்ற முதல் செயற்பாட்டிற்குக் கொண்டு வரப்பெற்றது. 1994 ஆம் ஆண்டுச் சட்டமானது தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ராஜ் திட்டங்களுக்கு பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது அவை: (அ) ஊராட்சிகளில் 3 அடுக்கு முறையை அறிமுகப்படுத்துதல்

(ஆ) ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கு மறைமுகத் தேர்தலை மீண்டும் அறிமுகப்படுத்துதல் (இ)தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு அமமக்கள் தொகையின் அடிப்படையில் இடஒதுக்கீடு செய்வதை அறிமுகப்படுத்துதல். (ஈ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் மகளிர் உட்பட, மகளிருக்கான இடஒதுக்கீடுத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் (உ) சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் (ஊ) மாவட்டத் திட்டக்குழு அமைத்தல் (எ) மாநில தேர்தல் ஆணையம், மாநில நிதி ஆணையம் ஆகியவற்றை நிறுவுதல் ஆகியவை ஆகும்.

1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டமியற்றப்பட்டாலும், 1996 ஆம் ஆண்டு மே வரை, ஊராட்சித் தேர்தலை நடத்துவதற்கு உள்ளபடியான முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. 1996 ஆம் ஆண்டு மே திங்களில், புதிய அரசு அமைக்கப்பட்டவுடனே, 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களின் ஊரக, நகர உள்ளாட்சி மன்றங்களுக்கு எல்லோரும் எதிர்பார்த்தவாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கான எல்லா நிலைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து தமிழக அரசானது 1994 தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 257வது பிரிவிலுள்ள வகைமுறைகளை கருத்தில் கொண்டு செயலாற்ற முனைந்தது. 257வது பிரிவின்படி "இந்த சட்டமானது பிறவாறு வகை செய்யப்பட்டவாறு அல்லாமல், அரசு அறிக்கை வாயிலாக மற்றும் அதில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கும், அல்லது இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட பிற குழு எதற்கும், பொருளாதார மேம்பாடு சமூக நீதிக்கு திட்டங்கள் தயாரிப்பது பொறுத்த அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மற்றும் IV -ஆம் இணைப்புப் பட்டியலில் இடப்பட்ட பொருட்கள் தொடர்பானவைகள் உள்ளடங்கலாக, பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படலாகும் அதிகாரங்களையும், அதிகார அமைப்பினையும் ஒப்படைக்கலாம்." என குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (4வது படிவத்தின்படி) கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி அமைப்புகளுக்கான இருபத்தி ஒன்பது இனம் சார்ந்த உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளில் முதல் தவணையாக வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல், நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல், கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை, மீன்வளம், சிறுதொழில்கள், கதர் கிராம மற்றும் குடிசைத்தொழில்கள், ஊரக வீட்டுவசதி, குடிநீர் வசதி, எரிபொருள் மற்றும் மாட்டுத்தீவனம், சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்துத் தொடர்புகள், ஊரக மின்மயமாக்கல், மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கல்வி,தொடக்கக் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி, தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கை தொழில் கல்வி, முதியோர் கல்வி மற்றும் முறைசாரா கல்வி, நூலகங்கள், சந்தைகள் மற்றும் கண்காட்சிகள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள், குடும்ப நலம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் நலிந்தோர் நலன், பொதுப்பகிர்வு முறை, சமுதாய சொத்துக்கள் பேணுதல் ஆகியவற்றின் மீது அரசு ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டு விட்டது.

# தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (4வது படிவத்தின்படி) கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்கள் அளித்தல்

## 1. வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல்.

1. காய்கறி வித்துக்களை கொள்முதல் செய்தலும், வழங்குதல் திட்டத்தில் பயனாளர்களை கண்டறிய உதவுதல்
2. சமுதாயக் கதிரடிக்கும் களம் திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
3. நெல், பசுந்தாள் உரம், கரும்பச்சை கடற்பாசி ஆகியவைகளை மானிய விலையில் வழங்கும் திட்டத்தில் பயனாளர்களை கண்டறிய உதவுதல்
4. தரிசு நில மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த உதவுதல்
5. கழிவு நீரையும், கழிவுப் பொருட்களையும் பயன்படுத்துவதன் மூலம் உள்ளூர் எரு ஆதாரங்களை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த உதவுதல்
6. சிறுகருவிப் பெட்டிகள், இரசாயன உரம், விதைகள் ஆகியவற்றை வழங்கும் திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
7. புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிதியுதவி செய்தல் திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
8. தென்னை வளர்ப்போருக்கு நுண்பாசன வசதிகளுக்கு நிதியுதவி திட்டத்தில் பயனாளர்களை கண்டறிய உதவுதல்
9. உழவர் பயிற்சி மையங்கள் திட்டத்தில் பயனாளர்களை கண்டறிய உதவுதல்
10. தோட்டக்கலைப் பயிற்சி மையம் திட்டத்தின்கீழ் பயனாளர்களை கண்டறிய உதவுதல்
11. வேளாண் தொழில்நுட்பவியலில் உழவர்களுக்கு (மகளிருக்கு) பயிற்சி அளித்தல் திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
12. நவீன வேளான் கருவிகளை வழங்குதல் திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
13. கம்போஸ்ட் உரக் குழியை அமைத்தல் திட்டத்தை செயல்படுத்துதல்
14. தீவிர பருத்தி மேம்பாடு திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
15. எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
16. தேசீய பயறு வகைகள் மேம்பாட்டு திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
17. வறட்சிப்பாங்கான பகுதித் திட்டம் பயனாளர்களை கண்டறிய உதவுதல்
18. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்
19. மானாவாரிப் பகுதிகளில் தேசீய நீர் வரத்துப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு

பயனாளர்களை கண்டறிய உதவுதல்

20. விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு பயனாளர்களை கண்டறிய உதவுதல்

(அரசாணை எண். 377 வேளாண்மை (வ.தி.) துறை நாள் 4.9.97)

## 2. நில சீர் திருத்தம் நில உச்சவரம்பு செயல்படுத்துதல்

1. **பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளை செயலாக்குவதில் உதவுதல்**

2. நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொணர உதவுதல்.

**(அரசாணை நிலை எண்.1006, வருவாய் (நி.வ.II) துறை, நாள் 27.10.97)**

## 3. கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை

1. துணை மையங்களில் செயற்கை முறையில் இனப்பெருக்கம் (வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்) திட்டத்தில் பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறைவிந்து வசதிகள் திட்டத்தில் பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

3. கிராம அளவில்/மாவட்ட அளவில் கால்நடை மற்றும் கோழியின கண்காட்சி நடத்துதல் (மாநிலத் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல்

4. இறைச்சிக் கொட்டில் பராமரிப்பு (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல்

5. செம்மறி ஆடு வளர்ப்பதற்காக சிறு உழவர்களுக்கு/சொற்ப உழவர்களுக்கு விவசாய கூலி நிதியுதவி (மாநில மற்றும் மத்திய திட்டம்) திட்டத்தில் பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

6. பன்றி வளர்ப்பு (மாநிலத் திட்டம்) திட்டத்தில்பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

7. விலங்குகள், பறவைகள் வழங்குதல் (மாநிலத் திட்டம்) பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

8. முயல் வளர்ப்பு, கோழி வளர்ப்புக்கு நிதயுதவி (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) திட்டத்திற்கு பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல், செயல்படுத்துதல்

9. மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவி (மாநிலத் திட்டம்) திட்டத்திற்கு பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

10. பால்பண்ணை கூட்டுறவு சங்கங்கள் (மத்திய பொருளுதவி பெறும் திட்டம்) திட்டத்திற்கு உதவி

11. தரமான கறவை மாடுகள் வழங்குதல் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) திட்டத்திற்கு பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

12. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகளுக்கான (மாநிலத் திட்டம்) பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

13. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகளுக்கான (மாநிலத் திட்டம்) பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

(அரசாணை எண்.200, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் (கா.ப.2) துறை நாள் 22.8.97)

## 4. மீன்வளம்

1. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்துதல் திட்டத்தில் பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/செயல்படுத்துதல்.

2. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளத்தை பயன்படுத்துல் / விற்பனை திட்டத்திற்கு பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

3. நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலையை அமைத்தல் - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

4. தூண்டுதல் முறை இறால் மீன் வளர்ப்பு மையங்களை நிறுவுதல் - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

5. உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவரமைப்பு களை நிறுவுதல் - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/செயற்படுத்துதல்.

6. மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தும் பொருட்டு நிலங்களை கையகப்படுத்துவதற்கான நிதியுதவி திட்டத்திற்கு உதவி செய்தல்.

7. நவீன மீன்பிடித் தொழில் நுட்பத்தில் மீனவர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் மீனவர்களுக்கு பயிற்சி கால உதவித் தொகை வழங்குதல் திட்டத்தில் பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

8. மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி.

9. சுத்தமான கொள்கலன்கள் மற்றும் முச்சக்கர மிதி வண்டிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக மீனவர்களுக்கு நிதி உதவி திட்டத்திற்கு பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

10. மீனவர்களின் கட்டுமரங்களுக்கு இரசாயண பூச்சு பூசுதல் திட்டத்திற்கு பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்

11. கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்களுக்கான நிதிஉதவி - உதவி

12. மீனவர் தொகுதி காப்புறுதி திட்டம் - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

13. மீனவர் சேமிப்பு நிவாரண திட்டம் பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

(அரசாணை எண்.238, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 16.10.97)

## 5. உணவு பதப்படுத்துதல் உட்பட சிறு தொழில்கள்

1. தொழிற்பேட்டைகளையும் வளர்ச்சி நிலையங்களையும் அமைத்தல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்.

2. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தில் அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்.

3. பிற்பட்ட பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைத்தல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்.

4. தொழில் இயக்குநரால் கட்டுப்படுத்தப்படும் பிற குழுவினருக்குக் கடன்கள் அளித்தல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் உதயவி செய்தல்.

5. பொது வசதிகளை அமைத்தல் தொடர்பாக உதவி செய்தல்

(அரசாணை எண்.75 ஊரக வளர்ச்சி துறை, நாள். 24.4.98)

## 6. கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்

1. ஊராட்சி அளவிலான செயல்பாடுகளைக் கண்டறிந்து அவைகளுக்கான திட்டங்களை உருவாக்க உதவிடல்.

2. பயிற்சிக்கும், திறமையை வளர்ப்பதற்கும் பயனாளிகளை தேர்ந்தெடுத்தல்

3. பயிற்சிக்கும், விற்பனைக்குமான வாய்ப்புகளை, கிராம கைவினைஞர்களுக்கு எடுத்துரைத்தல்.

(அரசாணை நிலை எண்.75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 7. ஊரக வீட்டு வசதி

1. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டுமனை ஒதுக்கீடு - உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல்

2. தமிழ்நாடு ஊரக வீட்டு வசதித் திட்டம் - உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல்

3. ஊரகப் பகுதிகளில் இருப்பிடத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் - உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல்

4. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் - உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல் / செயல்படுத்துதல்.

5. ஆதிதிராவிடர் வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிடப் பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டம் - உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல் மற்றும் செயல்படுத்துதல்.

6. பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான வீட்டு வசதி திட்டங்கள் - உதவி செய்வதற்குரியவர் களைக் கண்டறிதல் / செயல்படுத்துதல்.

(அரசாணை (நிலை) எண். 340, ஊரக வளர்ச்சி துறை, நாள். 3.12.97)

## 8. குடிநீர் வசதி

1. கைப்பம்புகள், கிணறுகள், ஊரணிகள், மேல்நிலைத் தொட்டிகள் உட்பட்ட கிராமக் குடிநீர் திட்டங்களை பராமரித்தல்

2. குடிநீர் வழங்கு திட்டங்களையும் அதற்கான இடங்களையும் கண்டறிய உதவுதல்

3. சுத்தமான குடிநீர் விநியோகம் மற்றும் நீரின் தரத்தை சோதித்தல் ஆகியவை.

(அரசாணை நிலை எண்.75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 9. சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து தொடர்புகள்

1. ஊராட்சிக்குச் சொந்தமான சாலைகளை பராமரித்தலும், அதனை மேம்படுத்தலும்

2. அரசால் உள்ளாட்சிகளுக்கு ஒப்படை செய்யப்படும் சாலைகளை பராமரித்தல்

3. தேவைக்கேற்ப, எங்கெல்லாம் மூலதன மற்றும் பராமரிப்புச் செலவுக்கு, வரிகளை விதித்தல்

4. சாலையோர மரங்கள், கன்றுகள் பராமரித்தல்

5. ஊராட்சிக்குச் சொந்தமான சாலைகளில் ஆக்கிரமிப்பை அகற்றி, தண்டக் கட்டணம் விதித்தல்.

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 10. ஊரக மின்மயமாக்கல்

1. கிராம தெருவிளக்குகள் பராமரித்தல், குழல் விளக்குகள், இணைப்புகள் முதலியவை வாங்குதல்

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 11. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்

1. தனிப்பட்ட கரிம வாயு கலன்கள், காற்றாலைகள் மற்ற ஏனைய கலன்களுக்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல்.

2. பயனாளிகளுக்கு தகுந்த மையங்களில் பயிற்சி ஏற்பாடு செய்தல்

3. கிராம அளவில் இக்கலன்களை மேற்பார்வையிட உதவுதல்

4. எரிசக்தியை மிச்சப்படுத்தும் கலன்களையும் மற்றும் மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பற்றியும் மக்களிடம் எடுத்துரைத்தல்.

(அரசாணை நிலை எண்.75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 12. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சுய வேலை வாய்ப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம் மற்றும் ஏனைய தனிநபர் பயனடையும் திட்டங்களுக்ககான பயன் அடைவோரைக் கண்டறிதல் மற்றும் தேர்ந்தெடுத்தல்.

2. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஏனைய ஊராட்சிகளுக்கு ஒப்படைககப்பட்ட வேலைவாய்ப்புத் திட்டங்களை நிறைவேற்றல்.

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 13. கல்வி, தொடக்கக்கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி

1. பள்ளிக்கூட கட்டிடம், கழிப்பறைகள் ஆகியவற்றை பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல், குடிநீர்வசதி செய்து தருதல் போன்றவற்றை கவனித்தும், பள்ளிகளை பார்வையிட்டு உதவித் தொடக்க கல்வி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்புதல்

2. படிப்பகங்கள் திறக்கலாம்.

(அரசாணை நிலை எண்.248 பள்ளி கல்வித் துறை, நாள் 11.6.97)

## 14. தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கை தொழில் கல்வி

1. குறிப்பிட்ட தொழில்களிலும், கலைகளிலும் பயிற்சிக்கான தேவைகளைக் கண்டறிதல்
2. நுட்பப் பயிற்சி நிலையங்கள், பயிற்சிகள் பற்றி செய்திகளைப் பரப்புதல்

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 15. நூலகங்கள்

1. புதிய படிப்பறைகள் மற்றும் நூலகங்கள் திறப்பது
2. தேவைக்கேற்ப இவைகளுக்கான கட்டிடங்கள் கட்டுவது

(அரசாணை நிலை எண்.75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 16. பண்பாடுகள்

அதிகார ஒப்படைப்பு ஏதுமில்லை.

## 17. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

1. பொது அங்காடிகள் - திட்டமிடுதல், பயனாளிகளைக் கண்டறிதல், செயல்படுத்துதல், பார்வையிடல்

2. தனியார் அங்காடிகள் - திட்டமிடுதல், பயனாளிகளைக் கண்டறிதல், பார்வையிடல், ஒருங்கிணைப்பு

3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் - ஒருங்கிணைப்பு, உதவுதல்

4. தொடக்க கூட்டுறவு அங்காடி - ஒருங்கிணைப்பு, அறிவுரை வழங்குதல்.

(அரசு ஆணை எண்.297, ஊரக வளர்ச்சித் துறை, நாள். 29.9.97)

## 18. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள்

1. மாவட்ட/வட்ட தலைமையக மருத்துவமனைகளை மேம்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/உதவி.

2. காசநோயைக் கட்டுபடுத்தல், மலேரியா நோய் ஒழிப்பு, உயிர்க்கொல்லி நோய், எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துதல், தொழுநோயைக் கட்டுப்படுத்துதல், போன்ற தேசிய சுகாதார திட்டங்களை மேற்பார்வையிடுதல் (மாநிலத் திட்டம், மத்திய தனித் திட்டம்) - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/உதவி.

3. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மருந்தகங்களை ஏற்படுத்துதல் (மாநிலத் திட்டம்) பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/உதவி.

4. தொலைதூரப் பகுதிகளில் இயங்கும் நடமாடும் மருத்துவப் பிரிவுகளின் பயனுக்கான நிதியுதவி (மாநிலத் திட்டம்) - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/உதவி.

5. நோய்களை கட்டுப்படுத்துதல்/தடுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடச் செய்தல் (மாநிலத் திட்டம்) - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

6. கண்சிகிச்சை முகாம்கள், குடும்பநல முகாம்கள் முதலியவற்ற ஏற்படுத்துவதில் தொண்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

7. தொடக்கச் சுகாதார மையங்கள்/மகப்பேறு மையஙகள் ஆகியவற்றின் கட்டுமானம்/மேற்பார்வை/ பராமரிப்பு திட்டத்தை செயற்படுத்துதல்

8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலின் முக்கியம் குறித்தும், நோய்களைக் கட்டுப்படுத்துவது குறித்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல்/உதவி.

9. தொடக்கச் சுகாதார மையங்களில், பலநோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கான பயிற்சிகளை நடத்துவதற்கு நிதியுதவி (மாநிலத் திட்டம்) - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

10. இளம்பிள்ளை வாதம், தொண்டை அடைப்பான் போன்றவற்றிற்கு எதிராக பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் தடுப்பூசி போட உதவி (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல், பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/உதவி.

11. மகப்பேறு மற்றும் குழந்தைகள் சுகதார மையங்களை மேற்பார்வையிடுதல் - செயற்படுத்துதல்.

12. பள்ளி சுகாதாரத் திட்டம் (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல்.

13. பிறப்பு - இறப்புப் புள்ளிவிவரங்களைப் பதிவு செய்வதை மேம்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல்.

14. துப்புரவுப் பணிகள் (மாநிலத் திட்டம்) - மேற்பார்வையிடுதல்/செயற்படுத்துதல்.

(அரசாணை நிலை எண்.220, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 4.7.97)

## 19. குடும்பநலம்

1. குடும்ப நல மையங்களை அமைத்து, பராமரித்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) - உதவி, பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

2. குடும்பநலத் திட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றை ஈடுபடச் செய்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டத்தின் நிர்வாகம், பராமரிப்பு.

3. குடும்ப நலம் குறித்து பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டத்தை செயற்படுத்துதல்.

4. குடும்பநலத் திட்டம் குறித்து மக்களுக்கு கல்வி புகட்ட நிதியுதவி/ஆண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை திட்டத்தை செயற்படுத்துதல்.

(அரசாணை நிலை எண்.220, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 4.7.97)

## 20. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

1. சத்துணவு மையங்களை ஏற்படுத்தி நிருவகித்து மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - பார்வையிடல்

2. ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டுத் திட்டம்/துணை ஊட்டச் சத்துத் திட்டம் (மத்திய அரசு பொறுப்பேறுகும் திட்டம்) - பார்வையிடல்

3. பள்ளிகள் ஒருங்கிணைந்த குழந்தைநல மேம்பாட்டுத் திட்ட மையங்கள் முதலியவற்றில் சததுணவுத் திட்டத்தை செயற்படுத்துதல் (மாநிலத் திட்டம்/மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்/வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்) - பார்வையிடல்

4. பால்வாடிகள் மற்றும் பாலர் பள்ளிகள் தொடங்குதல் திட்டத்திற்கு உதவியளித்தல்

5. ஸ்வீடன் நாட்டு உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை நலத் திட்ட தொகுப்புகளில் குழத் நல மையங்கள் கட்டுதல் (வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்) - உதவியளித்தல்

6. ஊட்டச்சத்து திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் - உதவியளித்தல்

7. சிசுக கொலையை ஒழிக்கும் திட்டம் மற்றும் கைவிடப்பட்ட பெண் குழத்களை பாதுகாத்தல் வளர்த்தல் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

8. மகளிருக்கான பணி நிலையங்களையும் உற்பத்தி பிரிவுகளையும் மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

9. வாழ்க்கை தொழில் பயிற்சி, ஏழை விதவைத் தாயின் குழந்தைகள், ஏழை விதவையின மகளின் திருமணத்திற்கு உதவி, அனாதை பெண்கள் ஆகியோருக்கு உதவியளித்தல் பேன்ற பல்வேறு மகளிர் நலத் திட்டங்களை மேற்பார்வை செய்தல் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

10. மகளிர் மற்றும் அதன் பொருளாதார நடவடிக்கைகள் குறித்த திட்டம் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

11. பணிக்கு செல்லும் மற்றும் உடல்நலம் இல்லாத பெண்களின் குழந்தைகளுக்காக காப்பகங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்/மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்)மற்றும் பார்வையிடல்.

12. மகளிருக்கான அனைத்து நலத் திட்டங்களுக்கும் உதவியளித்தல்

13. வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுவி (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

14. வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள பெண்களின் திருமணத்திற்கான நிதியுவி (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

15. பெண் குழந்தை நலத் திட்டத்திற்கான நிதியுதவி (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

16. ஆதரவற்ற கைம்பெண்கள்/கைவிடப்பட்ட மகளிருக்குத் தையல் இயந்திரம் வழங்குதல் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

17. ஏழை கைம்பெண்களின் மகளுக்கு திருமண முன்பணம் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

18. ஐ.எப்.எ.டி. திட்டத்தின் (IFAD) கீழ் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (வெளிநாடு உதவி பெறும் திட்டம்) - உதவியளித்தல்

(அரசாணை நிலை எண்.2, சமூகநலம் (மற்றும்) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5.1.98)

## 21. மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்டம்

1. பார்வையற்றோருக்கான/ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு இல்லங்களில் செயல்பாட்டை மேற்பார்வையிடல் - உதவியளித்தல்

2. உடல் ஊனமுற்றோருக்காக நடத்தப்படும் பள்ளிகள்/விடுதிகள் ஆகியவற்றை மேற்பார்வையிடல் - உதவியளித்தல்

3. ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை - உதவியளித்தல்

4. ஒருங்கிணைந்த இளம்பிள்ளை வாத ஒழிப்புத் திட்டத்திற்கு நிதியுதவி - உதவியளித்தல்

5. உடல் ஊனமுற்ற/மனநலக்குன்றிய குழந்தைகளின் மறுவாழ்வுக்காக அரசு சாராத அமைப்புகளுக்கு உதவி - உதவியளித்தல்

6. உடல் ஊனமுற்றோர்க்கான (பார்வையின்படி) காது கேளாமை, வாய் பேசாமை புதிய பள்ளிகள் தொடங்குதல் - உதவியளித்தல்

7. வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பார்வையற்ற வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பினை வழங்கல் (மாநிலத் திட்டம்) - - உதவியளித்தல்

8. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

(அரசாணை நிலை எண்.2, சமூகநலம் (மற்றும்) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5.1.98)

## 22. பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் நலம்

1. பட்டியல் இன மற்றும் பழங்குடியினர் நலனுக்காகச் செயற்படுத்தப்பட்டுவரும் பிற நலத் திட்டங்களை மேற்பார்வையிடுதலில் உதவுதல்.

2. இடுகாட்டிற்கும் சுடுகாட்டிற்கும் நடைபாதைகள் அமைத்தல் திட்டத்தை செயற்படுத்துதல்.

3. பல்வேறு திட்டங்கள் மற்றும் வீடு மேம்பாட்டின் கீழ் வீடுகள் கட்டல்/ வீட்டு மனைகளுக்கு வகை செய்யும் திட்டங்கள் தொடர்பாக வீடு கட்டுதல் ஊராட்சிகள் மூலமாக பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும்.

4. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கும் வீடுகளுக்கும் மின்வசதி அளித்தல் தொடர்பாக உதவி செய்வதற்குரியவர்களை கண்டறிதல்.
5. சமூக நலத் துறையால் செயற்படுத்தப்படும் கலப்புத் திருமணத்திற்கு பரிசு திட்டத்தில் உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல்.

6. சிறு வியாபாரிகளுக்கு உதவி திட்டத்தில் உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல்.

7. சமுதாயக் கூடம் மற்றும் துணி வெளுக்கும் இடங்கள் முதலியவற்றை கட்டுதல் திட்டம் செயற்படுத்துதல்.

8. 1955ம் ஆண்ட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் நடைமுறைப்படுத்துதல் திட்டத்தை செயற்படுத்துதல்.

9. பொதுமக்களிடம் தீண்டாமை ஒழிப்பைப் பரப்புதலை செயற்படுத்துதல்.

10. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தல் தொடர்பாக உதவி செய்வதற்குரியவர்களை கண்டறிதல்.

## 23. பொது பகிர்வு முறை

1. ஊராட்சித் தலைவர் அவ்வூராட்சியிலுள்ள நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்ய அமைக்கப்படவிருக்கும் ஊராட்சி அளவிலான குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பார்.

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் ஊராட்சிகளிலுள்ள நியாயவிலைக் கடைகளை பார்வையிடுதல், குறைகள் ஏதும் காணப்பட்டால் மாநில மற்றும் வருவாய் கோட்ட அளவிலான அமைப்புகளுக்கு தெரிவித்தல்.

## 24. சமுதாய சொத்துக்கள் பேணுதல்

1. அடையாளம் காணல், பதிவு செய்தல் வீதங்களை அறுதியிடல், சமுதாயச் சொத்துக்களுக்கானப் பயன்படுத்துவோர் கட்டணங்கள் - பயனாளிகளைக் கண்டறிதல், திட்டமிடுதல்/ஆய்வு.

2. விற்பனை, குத்தகை, மாற்றம் ஆகியவற்றுக்கான கருத்துரு வழங்கல் - செயல்படுத்துதல்.

3. தவறாகப் பயன்படுத்துதல், ஆக்கிரமிப்பு சேதம் மற்றும் இழப்பிற்கு எதரான பாதுகாப்பு - செயல்படுத்துதல்.

4. தொண்டு நிறுவனங்களின் பங்கு - செயல்படுத்துதல்.
(அரசாணை நிலை எண்.297, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 29.9.97)

## 25. கனிமவளம்***

1. 1959-ம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமவளம் சலுகை விதியின்படி மணல், ஜல்லி, களிமண் மற்றும் சரளை முதலியவற்றை நிர்வகித்தல்

2. ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கல்குவாரிகளை மாவட்ட ஆட்சித் தலைவரால் பராமரிக்கப்படும் பட்டியலில் சேர்த்தல் மற்றும் நீக்குதல்

3. ஊராட்சிப் பகுதிகளில் உள்ள கல்குவாரிகளுக்கு விதிக்கப்படும் உரிமை வரியை வசூலித்து ஊராட்சி பொது நிதியில சேர்த்தல்.

4. கள்ளத்தனமாக கொண்டு செல்லப்படும் சிறு கனிமங்களையும் மற்றும் வாகனங்களை பறிமுதல் செய்தல்

5. ஊராட்சிப் பகுதியிலிருந்து சிறு கனிமங்களை கொண்டு செல்லும் வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கல்

6. ஊராட்சி பகுதிகளிலுள்ள கல்குவாரிகளையும் அவைகளின் கணக்கு புத்தகங்களை ஆய்வு செய்தல்.

(அரசாணை நிலை எண்.3, தொழில் (எம்.எம்.சி.1) துறை, நாள் 2.1.98)

*** இந்த அதிகார ஒப்படைப்புகளை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தடையாணை பெறப்பட்டுள்ளது.

## 26. விளையாட்டு போட்டிகள் நடத்துதல்

கைப்பந்து, கபடி, கால்பந்து மற்றும் தடகளப்போட்டிகள் ஊராட்சிகள் நடத்தவும் மற்றும் ஊராட்சி மட்டத்தில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கு ரூபாய்.50/- பெறுமானமுள்ள பரிசுகள் வழங்க ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(அரசு ஆணை 76 ஊரக வளர்ச்சி துறை நாள்.24.4.98)

# தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (4-வது படிவத்தின்படி) ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரங்கள் அளித்தல்

## 1. வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவு படுத்துதல்.

1. காய்கறி வித்துக்களை கொள்முதல் செய்தலும், வழங்குதல் திட்டத்தை செயல்படுத்த உதவுதல்

2. சமுதாயக் கதிரடிக்கும் களம் அமைக்க திட்டமிடல்

3. தரிசு நில மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த உதவுதல்

4. கழிவு நீரையும், கழிவுப் பொருட்களையும் பயன்படுத்துவதன் மூலம் உள்ளூர் எரு ஆதாரங்களை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த உதவுதல்

5. கம்போஸ்ட் உரக் குழிகளை அமைக்க திட்டமிடல்

6. தோட்டக்கலைத் திட்டத்தின்கீழ் கன்றுகள் வழங்குதல் திட்டத்திற்கு உதவி செய்தல்

7. வறட்சிப்பாங்கான பகுதித் திட்டத்தை ஒருங்கிணைத்தல், ஆலோசனை வழங்குதல்

8. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை ஒருங்கிணைத்தல், ஆலோசனை வழங்குதல்

9. ஒருங்கிணைந்த நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்

10. மானாவாரிப் பகுதிகளில் தேசீய நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்

11. விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்

(அரசாணை எண். 377 வேளாண்மை (வ.தி) துறை நாள் 4.9.97)

## 2. நில சீர் திருத்தம் நில உச்சவரம்பு செயல்படுத்துதல்

1. பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளை செயலாக்கும் திட்டத்தை மேற்பார்வையிடுதல்

2. நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொணர்தல் திட்டத்தை மேற்பார்வையிடுதல்

3. பிற நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயலாக்குதல் திட்டத்தை மேற்பார்வையிடுதல்.
(அரசாணை நிலை எண்.1006, வருவாய் (நி.வ.II) துறை, நாள் 27.10.97)

## 3. கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை

1. கால்நடை துணை மையம்/மருத்துவமனை (மாநிலத் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல், பார்வையிடல்

2. துணை மையங்களில் செயற்கை முறையில் இனப்பெருக்கம் (வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல், பார்வையிடல், மேற்பார்வையிடல்

3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறைவிந்து வசதிகள் திட்டத்தை செயற்படுத்துதல்.

4. கிராம அளவில்/மாவட்ட அளவில் கால்நடை மற்றும் கோழியின கண்காட்சி நடத்துதல் (மாநிலத் திட்டம்) திட்டத்தை மேற்பார்வையிடல்

5. இறைச்சிக் கொட்டில் பராமரிப்பு (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல்

6. செம்மறியாடு வளர்ப்பதற்காக சிறு உழவர்களுக்கு/சொற்ப உழவர்களுக்கு விவசாயக்கூலி நிதியுதவி (மாநில மற்றும் மத்திய திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல்

7. பன்றி வளர்ப்பு (மாநிலத் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல்

8. விலங்குகள், பறவைகள் வழங்குதல் (மாநிலத் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல், பார்வையிடல்

9. முயல் வளர்ப்பு, கோழி வளர்ப்புக்கு நிதியுதவி (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல்

10. மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவி (மாநிலத் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல்

11. பால்பண்ணை கூட்டுறவு சங்கங்கள் (மத்திய பொருளுதவி பெறும் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்

12. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டம் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்

13. தரமான கறவை மாடுகள் வழங்குதல் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்

14. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் (மாநிலத் திட்டம்) திட்டத்தை பார்வையிடல், மேற்பார்வையிடல், மறு ஆய்வு.

15. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் (மாநிலத் திட்டம்) திட்டத்தை பார்வையிடல், மேற்பார்வையிடல், மறு ஆய்வு.

(அரசாணை எண்.200 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் (கா.ப.2) துறை நாள் 22.8.97)

## 4. மீன்வளம்

1. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்துதல் - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/செயல்படுத்துதல்.

2. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளத்தை பயன்படுத்துதலும் விற்பனையும் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல், பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

3. நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலையை அமைத்தல் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்

4. தூண்டுதல் முறை இறால் மீன் வளர்ப்பு மையங்களை நிறுவுதல் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்

5. உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவரமைப்பு களை நிறுவுதல் - பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்.

6. கடற்கரையோரப் பகுதிகளில் மீனை இறக்கும் வசதிகளை மேம்படுத்துதல் திட்டத்தை செயற்படுத்துதல்.

7. கடற்கரையோர மீன்பிடிப்பு கிராமப் பகுதிகளில அடிப்படை வசதிகளை மேம்படுத்துல் திட்டத்தை செயற்படுத்துதல்.

8. மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தும் பொருட்டு நிலங்களை கையகப்படுத்துவதற்கான நிதியுதவி திட்டத்திற்கு உதவி

9. மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி திட்டத்திற்கு உதவி.

10. சுத்தமான கொள்கலன்கள் மற்றும் முச்சக்கர மிதி வண்டிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக மீனவர்களுக்கு நிதி உதவி திட்டத்தை செயற்படுத்துல்.

11. கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்களுக்கான நிதி உதவி திட்டத்திற்கு திட்டமிடுதல்.

12. மீனவர் தொகுதி காப்புறுதி திட்டத்தை செயற்படுத்துதல்.

13. மீனவர் சேமிப்பு நிவாரண திட்டத்தை செயற்படுத்துதல்.

(அரசாணை எண்.238, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 16.10.97)

### 5. உணவு பதப்படுத்துதல் உட்பட சிறு தொழில்கள்

1) தொழிற்பேட்டைகளையும் வளர்ச்சி நிலையங்களையும் அமைத்தல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்.
2) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும உதவி செய்தல்.
3) பிற்பட்ட பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைத்தல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்.
4) தொழில் இயக்குநரால் கட்டுப்படுத்தப்படும் பிற குழுவினர்க்கு கடன்கள் வழங்குதலில் அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்.
5) பொது வசதிகளை அமைத்தல் தொடர்பாக உதவி செய்தல்.

(அரசாணை (நிலை) எண்.75 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 24.4.1998)

### 6. கதர் கிராம மறறும் குடிசைத் தொழில்கள்

1. கிராமக் கைவினைஞர்களுக்கு திறமைகளை வளர்க்கவும், தொழில் நுணுக்கத்தை கற்பிக்கவும், புதிய பயிற்சி மற்றும் தொழில் மையங்களை தொடங்குதல் அல்லது ஏற்கெனவே உள்ள அலகுகளை மாற்றியமைத்தல்.

2. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை கூட்டுறவுச சங்கங்கள் மூலம் விற்பனை செய்ய உதவுதல்

3. கைவினைஞர்கள் கடன் வசதி பெறுவதற்கு உதவுதல்

தொழில் நுட்பப் பயிற்சி மற்றும மேம்பாட்டிற்கு பயனாளிகளை ஊராட்சிகள் மூலமாக தேர்வு செயய உதவுதல்

(அரசாணை நிலை எண் 75 ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 7. ஊரக வீட்டு வசதி

1. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டுமனை ஒதுக்கீடு - உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல், பார்வையிடல், மேற்பார்வையிடல்.

2. தமிழ்நாடு ஊரக வீட்டு வசதித் திட்டம் - பாாவையிடல், மேறபார்வையிடல், ஆய்வு.

3. ஊரகப் பகுதிகளில் இருப்பிடத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் - பார்வையிடல், மேற்பார்வையிடல், ஆய்வு.

4. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் - பார்வையிடல், மேற்பார்வையிடல், ஆய்வு.

5. ஆதிதிராவிடர் வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிடப் பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டம் - பார்வையிடல், மேற்பார்வையிடல், ஆய்வு.

6. பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான வீட்டு வசதி திட்டங்கள் - பார்வையிடல், மேற்பார்வையிடல், ஆய்வு.

(அரசாணை நிலை எண். 340 ஊரக வளர்ச்சி துறை நாள். 3.12.97)

## 8. குடிநீர் வசதி

1. கிராமங்களுக்கான குடிநீர் திட்டங்களைக் கண்டறிதல் மற்றம் முன்னுரிமை அளித்தல்

2. திட்டங்களின் தரம் மற்றும் முன்னேற்றத்தினை மேலாண்மைச் செய்தல்

3. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குடிநீர் வழங்கு திட்டங்களை பராமரித்தல் மற்றும் எங்கெல்லாம் இயலுமோ அங்கு தண்ணீர் கட்டணங்களை வசூலித்தல்

(அரசாணை நிலை எண். 75 ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 9. சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து தொடர்புகள்

1. ஊராட்சி ஒன்றியச் சாலைகளை பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்

2. ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சாலைப் பணிகளுக்கான திட்டங்களைத் தயாரித்தல், அனுமதித்தல், மேற்பார்வையிடல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

3. நடைமுறைப்படுத்தப்படும் சாலைப்பணிகளின தரத்தினை கண்காணித்தல்

4. சாலையோரங்களில் மரங்கள் வளர்த்தல் மற்றும் கன்றுகள் நடுதல்

5. ஆக்கிரமிப்புகளை நீக்குதல் மற்றும் தண்டக்கட்டணம் வசூலித்தல் போன்றவை.

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 10. ஊரக மின்மயமாக்கல்

1. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் அரசு ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும், குறிப்பாக நீரிறைக்கும் விசைப்பம்புகளுக்கு மின்னூட்டல், ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மற்றும் குடிசைகளுக்கான மின்னிணைப்பு தரும் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மேலாய்வு செய்தல்.

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 11. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்

1. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்குதல்

2. சாண எரிவாயு, காற்றாலை மற்றும பிறதிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

3. எரிசக்தி சேமிப்பு வழிகளை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப்படுத்துதல்

4. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 114(2)-ன்படி ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசாணை எண்.886 ஊரக வளர்ச்சித் துறை நாள் 29.10.90-ல் கொடுக்கப்பட்டுள்ள திட்ட ஆய்வுப் பணிகள் தற்போதைய சூழ்நிலையில் இத்துறைகளில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கேற்ப தக்க திருத்தங்களுடன் திரும்ப ஒப்படை செய்யப்பட உள்ளது.

(அரசாணை நிலை எண்.75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 12. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

1. திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஊராட்சிகளுக்கு தொழில் நுட்ப மற்றும் நிர்வாக உதவிகள் அளித்தல்.

2. ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

3. மேலாய்வு மற்றும் முன்னேற்றம் குறித்த புள்ளி விவரங்களைச் சேகரித்து மாவட்ட அளவில் வழங்குதல்.

4. திட்டங்களை மதிப்பிடுவதில் உதவுதல்.

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 13. கல்வி, தொடக்கக்கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி

1. பள்ளிக்கூட கட்டிடம், கழிப்பறைகள் ஆகியவற்றை பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல், குடிநீர்வசதி செய்து தருதல் போன்றவற்றை கவனித்தும், பள்ளிகளை பார்வையிட்டு உதவித் தொடக்க கல்வி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்புதல்

2. படிப்பகங்கள் திறக்கலாம்.

(அரசாணை நிலை எண்.248 பள்ளி கல்வித் துறை, நாள் 11.6.97)

## 14. தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கை தொழில் கல்வி

1. புதிய தொழில்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் தோற்றுவிப்பதற்கான தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் பரிந்துரைத்தல்

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 15. நூலகங்கள்

1. கிராமங்களில் நூலகங்களை உருவாக்குவதற்கான விரிவான திட்டங்களைத் தயாரிப்பதில் உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவிற்கு உதவுதல்

2. நூலகங்கள் மற்றும் படிப்பகங்களுக்கான கட்டிடங்களை கட்ட ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி செய்தல்

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 16. பண்பாடுகள்

1. தற்பொழுது நலிந்த நிலையிலுள்ள சிறந்த கலைஞர்களுக்கு நிதியுதவி திட்டத்தை மேற்பார்வையிடல்

2. புதிய கலைப் பள்ளிகளுக்கு ஊக்கமளித்தல் திட்டத்தின் மேலாண்மையும், பேணுகையும்

3. விளையாட்டு மேம்பாட்டு ஆணையததிற்கு நிதியுதவி விளையாட்டு வளாகங்களை நிறுவுவதுடன் மிகவும் இளமையாக இருப்பவர்களைத் தேர்ந்தெடுத்து விளையாட்டு கற்றுக் கொடுத்தல் உள்ளடங்கிய திட்டத்திற்கு பயனாளிகளைக் கண்டறிதல்.

(அரசாணை நிலை எண்.297, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 29.9.97)

## 17. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

1. பொது அங்காடிகள் - திட்டமிடுதல், பயனாளிகளைக் கண்டறிதல், செயல்படுத்துதல், பார்வையிடல்

2. தனியார் அங்காடிகள் - திட்டமிடுதல், பயனாளிகளைக் கண்டறிதல், பார்வையிடல், ஒருங்கிணைப்பு

3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் - ஒருங்கிணைப்பு, அறிவுரை வழங்குதல்.

4. தொடக்க கூட்டுறவு அங்காடி - ஒருங்கிணைப்பு, அறிவுரை வழங்குதல்.
(அரசு ஆணை எண்.297 ஊரக வளர்ச்சித் துறை நாள். 29.9.97)

## 18. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள்

1. மாவட்ட/வட்ட தலைமையக மருத்துவமனைகளை மேம்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - மேற்பார்வை, ஆய்வு

2. காசநோயைக் கட்டுபடுத்தல், மலேரியா நோய் ஒழிப்பு, உயிர்க்கொல்லி நோய், எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துதல், தொழுநோயைக் கட்டுப்படுத்துதல், போன்ற தேசீய சுகாதார திட்டங்களை மேற்பார்வையிடுதல் (மாநிலத் திட்டம், மத்திய தனித் திட்டம்) - செயற்படுத்துதல், மேற்பார்வை, ஆய்வு.

3. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மருந்தகங்களை ஏற்படுத்துதல் (மாநிலத் திட்டம்) செயற்படுத்துதல், மேற்பார்வை, ஆய்வு

4. தொலைதூரப் பகுதிகளில் இயங்கும் நடமாடும் மருத்துவப் பிரிவுகளின் பயனுக்கான நிதியுதவி (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல், மேற்பார்வை, ஆய்வு.

5. நோய்களை கட்டுப்படுத்துதல்/தடுத்தல் ஆகிய நடவடிக்கைகளில மக்களை ஈடுபடச் செய்தல் (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல், மேற்பார்வை, ஆய்வு.

6. கண்சிகிச்சை முகாம்கள், குடும்பநல முகாம்கள் முதலியவற்ற ஏற்படுத்துவதில் தொண்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்தல். (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) - நிர்வாகம், பராமரிப்பு.

7. தொடக்கச் சுகாதார மையங்கள்/மகப்பேறு மையங்கள் ஆகியவற்றின் கட்டுமானம்/மேற்பார்வை/ பராமரிப்பு (மாநிலத் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல், மேற்பார்வையிடல்

8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலின் முக்கியம் குறித்தும், நோய்களைக் கட்டுப்படுத்துவது குறித்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - உதவி, மேற்பார்வையிடல்.

9. தொடக்கச் சுகாதார மையங்களில், பலநோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்ான பயிற்சிகளை நடத்துவதற்கு நிதியுதவி (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல்.

10. இளம்பிள்ளை வாதம், தொண்டை அடைப்பான் போன்றவற்றிற்கு எதிராக பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் தடுப்பூசி போட உதவி (மாநிலத் திட்டம்) - மேற்பார்வை, மறு ஆய்வு, செயற்படுத்துதல்

11. மகப்பேறு மற்றும் குழந்தைகள் சுகாதார மையங்களை மேற்பார்வையிடுதல் (மாநிலத் திட்டம்) - உதவி, ஆலோசனை வழங்குதல், ஆய்வு.

12. பள்ளி சுகாதாரத் திட்டம் (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல், மேற்பார்வையிடுதல்.

13. பிறப்பு - இறப்புப் புள்ளிவிவரங்களைப் பதிவு செய்வதை மேம்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல்.

14. துப்புரவுப் பணிகள் (மாநிலத் திட்டம்) - மேற்பார்வையிடல், உதவி.

(அரசாணை நிலை எண்.220, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 4.7.97)

## 19. குடும்பநலம்

1. குடும்ப நல மையங்களை அமைத்து, பராமரித்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டத்திற்கு செயற்படுத்துதல், மேற்பார்வையிடல், உதவி.

2. வட்டார குடும்ப நல பயிற்சி மையம்/மாவட்ட குடும்ப நல அமைப்பு ஆகியவற்றை அமைத்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டங்களை ஆய்வு செய்தல்.

3. குடும்பநலத் திட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றை ஈடுபடச் செய்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டத்தின் நிர்வாகம், பராமரிப்பு, ஆய்வு.

4. குடும்ப நலம் குறித்து பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டத்தை செயற்படுத்துதல், ஆய்வு.

5. குடும்பநலத் திட்டம் குறித்து மக்களுக்கு கல்வி புகட்ட நிதியுதவி/ஆண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சைதிட்டத்தை செயற்படுத்துதல், ஆய்வு.

(அரசாணை நிலை எண்.220, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 4.7.97)

## 20. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

1. சத்துணவு மையங்களை ஏற்படுத்தி நிருவகித்து மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - பார்வையிடல்

2. ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டுத் திட்டம்/துணை ஊட்டச் சத்துத் திட்டம் (மத்திய அரசு பொறுப்பேறுகும் திட்டம்) - பார்வையிடல்

3. பள்ளிகள் ஒருங்கிணைந்த குழந்தைநல மேம்பாட்டுத் திட்ட மையங்கள் முதலியவற்றில் சததுணவுத் திட்டத்தை செயற்படுத்துதல் (மாநிலத் திட்டம்/மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்/வெளிநாடு உதவி பெறும் திட்டம்) - பார்வையிடல்

4. பால்வாடிகள் மற்றும் பாலர் பள்ளிகள் தொடங்குதல் திட்டத்திற்கு உதவியளித்தல்

5. ஸ்வீடன் நாட்டு உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை நலத் திட்ட தொகுப்புகளில் குழந்தை நல மையங்கள் கட்டுதல் (வெளிநாடு உதவி பெறும் திட்டம்) - உதவியளித்தல்

6. ஊட்டச்சத்து திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் - உதவியளித்தல்

7. சிசுக் கொலையை ஒழிக்கும் திட்டம் மற்றும் கைவிடப்பட்ட பெண் குழந்தைகளை பாதுகாத்தல் வளர்த்தல் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

8. மகளிருக்கான பணி நிலையங்களையும் உற்பத்தி பிரிவுகளையும் மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

9. வாழ்க்கை தொழில் பயிற்சி, ஏழை விதவைத் தாயின் குழந்தைகள், ஏழை விதவையின மகளின் திருமணத்திற்கு உதவி, அனாதை பெண்கள் ஆகியோருக்கு உதவியளித்தல் பேன்ற பல்வேறு மகளிர் நலத் திட்டங்களை மேற்பார்வை செய்ல் (மாநிலத் திட்டம்) - உநவியளித்தல்

10. மகளிர் மற்றும் அதன்பொருளாதார நடவடிக்கைகள் குறித்த திட்டம் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

11. பணிக்கு செல்லும் மற்றும் உடல்நலம் இல்லாத பெண்களின் குழந்தைகளுக்காக காப்பகங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்/மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்/வெளிநாடு உதவி பெறும் திட்டம்) - பார்வையிடல்

12. மகளிருக்கான அனைத்து நலத் திட்டங்களை பார்வையிடல்

13. மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - பார்வையிடல்

14. அனாதை இல்லங்களின் செயற்பாட்டை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - பார்வையிடல்

15. வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுவி (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

16. வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள பெண்களின் திருமணத்திற்கான நிதியுவி (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

17. பெண் குழந்தை நலத் திட்டத்திற்கான நிதியுவி (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

18. ஆதரவற்ற கைம்பெண்கள்/கைவிடப்பட்ட மகளிருக்குத் தையல் இயந்திரம் வழங்குதல் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

19. ஏழை கைம்பெண்களின் மகளுக்கு திருமண முன்பணம் (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

20. ஐ.எப்.எ.டி. திட்டத்தின் (IFAD) கீழ் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (வெளிநாடு உதவி பெறும் திட்டம்) - உதவியளித்தல்

21. முதியோர் இல்லங்களின் செயல்பாடு குறித்த திட்டங்களை பார்வையிடல்.

(அரசாணை நிலை எண்.2, சமூகநலம் (மற்றும்) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5.1.98)

## 21. மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்டம்

1. பார்வையற்றோருக்கான/ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு இல்லங்களில் செயல்பாட்டை மேற்பார்வையிடல் - பார்வையிடல்

2. உடல் ஊனமுற்றோருக்காக நடத்தப்படும் பள்ளிகள்/விடுதிகள் ஆகியவற்றை மேற்பார்வையிடல் - பார்வையிடல்

3. ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை - பார்வையிடல்

4. ஒருங்கிணைந்த இளம்பிள்ளை வாத ஒழிப்புத் திட்டத்திற்கு நிதியுதவி - உதவியளித்தல்

5. உடல் ஊனமுற்ற/மனநலக்குன்றிய குழந்தைகளின் மறுவாழ்வுக்காக அரசு சாராத அமைப்புகளுக்கு உதவி - உதவியளித்தல்

6. உடல் ஊனமுற்றோர்க்கான (பார்வையின்படி) காது கேளாமை, வாய் பேசாமை புதிய பள்ளிகள் தொடங்குதல் - உதவியளித்தல்

7. வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பார்வையற்ற வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பினை வழங்கல் (மாநிலத் திட்டம்) - - உதவியளித்தல்

8. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை (மாநிலத் திட்டம்) - உதவியளித்தல்

9. சீர்திருத்த இல்லங்கள் விழிப்புப்பணி நிறுவனங்கள், சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிடல்.
(அரசாணை நிலை எண்.2, சமூகநலம் (மற்றும்) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5.1.98)

## 22. பட்டியல் இனத்தோர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் நலம்

1. பட்டியல் இன மற்றும் பழங்குடியினர் நலனுக்குகாகச் செயற்படுத்தப்பட்டுவரும் பிற நலத் திட்டங்களை ஆய்வு செய்தல்.

2. இடுகாட்டிற்கும் சுடுகாட்டிற்கும் நடைபாதைகள் அமைத்தல் திட்டத்தை செயற்படுத்துதல்.

3. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கும் வீடுகளுக்கும் மின் வசதி அளித்தல் திட்டத்தை ஆய்வு செய்தல்.

4. நலத் துறையால் செயற்படுத்தப்படும் கலப்புத் திருமணத்திற்கு பரிசு திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் ஆய்வு செய்தல்.

5. சிறு வியாபாரிகளுக்கு உதவி திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. சமுதாயக் கூடம் மற்றும் துணி வெளுக்கும் இடங்கள் முதலியவற்றை கட்டுதல் திட்டத்திக்கு உதவுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

7. 1955-ஆம் ஆண்டு குடியிரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் -நடைமுறைப்பபடுத்துதல் திட்டத்தை ஆய்வு செய்தல்.

8. மக்களிடம் தீண்டாமை ஒழிப்பை செயல்படுத்தலை ஆய்வு செய்தல்.

9. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தல் தொடர்பாக உதவி செய்வதற்குரியவர்களை கண்டறிதல்.

10. துப்புறவு பணியாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளோர்களுக்கும் மறு வாழ்வு அளித்தலை பேரூராட்சி மற்றும் நகராட்சி சாராத இடங்களில் மேற்கொள்ளுதல்.

11. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்களுக்குப் பயிற்சித் திட்டமும் சிறப்புப் பயிற்சி அளித்தல் திட்டத்திற்கு உதவுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

12. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கலை செயற்படுத்துதல் மற்றும் ஆய்வு செய்தல்.
(அரசாணை எண்.77, ஊரக வளர்ச்சி, நாள் 25.4.98)

## 23. பொது பகிர்வு முறை

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் ஊராட்சிகளிலுள்ள நியாயவிலைக்கடைகளை பார்வையிடுதல் மற்றும் குறைகள் ஏதும் காணப்பட்டால் மாநில மற்றும் வருவாய்க் கோட்ட அளவிலான அமைப்புக்கு தெரிவித்தல்.
(அரசாணை எண்.203, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (எப்.1) துறை, நாள் 29.7.97)

## 24. சமுதாய சொத்துக்கள் பேணுதல்

1. அடையாளம் காணல், பதிவு செய்தல், வீதங்களை அறுதியிடல், சமுதாயச் சொத்துக்களுக்கானப் பயன்படுத்துவோர் கட்டணங்கள் - மேற்பார்வையிடல்.

2. விற்பனை, குத்தகை, மாற்றம் ஆகியவற்றுக்கான கருத்துரு வழங்கல் - ஆய்வு, மேற்பார்வையிடல்.

3. தவறாகப் பயன்படுத்துதல், ஆக்கிரமிப்பு சேதம் மற்றும் இழப்பிற்கு எதிரான பாதுகாப்பு - ஆய்வு, மேற்பார்வையிடல்.

4. தொண்டு நிறுவனங்களின் பங்கு - திட்டமிடுதல்.

(அரசாணை நிலை எண்.297, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 29.9.97)

## 25. விளையாட்டு போட்டிகள் நடத்துதல்

கைப்பந்து, கபடி, கால்பந்து மற்றும் தடகளப் போட்டிகள் ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தவும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் நடடத்தப்படும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறும் குழுவில் உறுப்பினராக இருக்கும் வீரர்களுக்கு ரூ.100/- பெறுமானமுள்ள பரிசுகள் வழங்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

(அரசாணை நிலை எண்.76, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 24.4.98)

# தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (4-வது படிவத்தின்படி) மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிகாரங்கள் அளித்தல்

## 1. வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவு படுத்துதல்.

1. வேளாண்மை திட்டமிடலுக்கு ஆலோசனை வழங்குதல்.
2. ஒருங்கிணைந்த தானிய வகை மேம்பாட்டுத் (அரிசி) திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
3. நெல், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி முதலியவற்றை பெருக்குதலும், வழங்குதலும் திட்டத்தில் ஆலோசனை வழங்குதல்.
4. காய்கறி வித்துக்களை கொள்முதல் செய்தலும், வழங்குதல் திட்டத்திற்கு ஒருங்கிணைப்புகளுக்கான ஆலோசனை வழங்குதல்.
5. சமுதாயக் கதிரடிக்கும் களம் திட்டத்தை செயற்படுத்துதல்
6. தரிசு நில மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டத்தை ஒருங்கிணைத்தல்
7. கழிவு நீரையும், கழிவுப் பொருட்களையும் பயன்படுத்துவதன் மூலம் உள்ளூர் எரு ஆதாரங்களை மேம்படுத்த திட்டமிடல்.
8. கம்போஸ்ட் உரக் குழிகளை அமைக்க திட்டமிடல்.
9. வறட்சிப்பாங்கான பகுதித் திட்டத்தை ஒருங்கிணைத்தல், ஆலோசனை வழங்குதல்
10. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை ஒருங்கிணைத்தல், ஆலோசனை வழங்குதல்
11. ஒருங்கிணைந்த நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்
12. மானாவாரிப் பகுதிகளில் தேசீய நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்
13. விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குதல்

(அரசாணை எண். 377 வேளாண்மை துறை நாள் 4.9.97)

## 2. நில சீர் திருத்தம் நில உச்சவரம்பு செயல்படுத்துதல்

1. பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளை செயலாக்கம், திட்டத்தை மேற்பார்வையிடுதல்
2. நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொணர்தல் திட்டத்தை மேற்பார்வையிடுதல்
3. பிற நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயலாக்குதல் திட்டத்தை மேற்பார்வையிடுதல்.

(அரசாணை நிலை எண்.1006, வருவாய் (நி.வ.II) துறை, நாள் 27.10.97)

## 3. கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை

1. கால்நடை துணை மையம்/மருத்துவமனை (மாநிலத் திட்டம்) திட்டத்தை மேற்பார்வையிடல், மறு ஆய்வு செய்தல்

2. துணை மையங்களில் செயற்கை முறையில் இனப்பெருக்கம் (வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்

3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறைவிந்து வசதிகள் திட்டத்தை மேற்பார்வையிடல், மறு ஆய்வு செய்தல்

4. கிராம அளவில்/மாவட்ட அளவில் கால்நடை மற்றும் கோழியின கண்காட்சி நடத்துதல் (மாநிலத் திட்டம்) திட்டத்தை செயற்படுத்துதல், மறு ஆய்வு செய்தல்

5. இறைச்சிக் கொட்டில் பராமரிப்பு (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) திட்டத்தை மேற்பார்வையிடல், மறு ஆய்வு செய்தல்

6. செம்மறியாடு வளர்ப்பதற்காக சிறு உழவர்களுக்கு/சொற்ப உழவர்களுக்கு விவசாயக்கூலி நிதியுதவி (மாநில மற்றும் மத்திய திட்டம்) திட்டத்தை மேற்பார்வையிடல், மறு ஆய்வு செய்தல்

7. பன்றி வளர்ப்பு (மாநிலத் திட்டம்) திட்டத்தை மேற்பார்வையிடல், மறு ஆய்வு செய்தல்

8. விலங்குகள், பறவைகள் வழங்குதல் (மாநிலத் திட்டம்) திட்டத்தை மேற்பார்வையிடல், மறு ஆய்வு செய்தல்

9. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கால்நடை குறித்த கணக்கெடுப்பு (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) திட்டத்தை மேற்பார்வையிடல், மறு ஆய்வு செய்தல்

10. முயல் வளர்ப்பு, கோழி வளர்ப்புக்கு நிதியுதவி (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) திட்டத்தை மேற்பார்வையிடல், மறு ஆய்வு செய்தல்

11. மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவி (மாநிலத் திட்டம்) திட்டத்தை பார்வையிடல்.

12. பால்பண்ணை கூட்டுறவு சங்கங்கள் (மத்திய பொருளுதவி பெறும் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்

13. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டம் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்

14. தரமான கறவை மாடுகள் வழங்குதல் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்

15. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் (மாநிலத் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.

16. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் (மாநிலத் திட்டம்) திட்டத்தை மறு ஆய்வு செய்தல்

(அரசாணை எண்.200, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் (கா.ப.2) துறை, நாள் 22.8.97)

## 4. மீன்வளம்

1. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்துதல் -திட்டமிடுதல், மறு ஆய்வு, மேற்பார்வையிடுதல்.

2. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளத்தை பயன்படுத்துதலும் விற்பனையும் திட்டத்திற்கு -திட்டமிடுதல், மறு ஆய்வு

3. நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலையை அமைத்தல் திட்டத்திற்கு திட்டமிடுதல், மறு ஆய்வு

4. தூண்டுதல் முறை இறால் மீன் வளர்ப்பு மையங்களை நிறுவுதல் திட்டத்திற்கு திட்டமிடுதல், மறு ஆய்வு.

5. உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவரமைப்பு களை நிறுவுதல் - திட்டமிடுதல், மறு ஆய்வு.

6. கடற்கரையோரப் பகுதிகளில் மீனை இறக்கும் வசதிகளை மேம்படுத்துதலை மறு ஆய்வு செய்தல்

7. கடற்கரையோர மீன்பிடிப்பு கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் - திட்டமிடுதல், மறு ஆய்வு.

8. மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தும் பொருட்டு நிலங்களை கையகப்படுத்துவதற்கான நிதியுதவி திட்டமிடுதல், ஆலோசனை வழங்குதல்.

9. நவீன மீன்பிடித் தொழில்நுட்பத்தில் மீனவர்களுக்கு பயிற்சி அளித்ததல் மற்றும் மீனவளர்களுக்கு பயிற்சிக் கால உதவித் தொகை வழங்குதலுக்கு திட்டமிடுதல், மறு ஆய்வு.

10. மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி திட்டத்திற்கு உதவி, திட்டமிடுதல்.

11. மீன் காட்சியகங்களை நிறுவுவதற்கு திட்டமிடுதல்.

12. சுத்தமான கொள்கலன்கள் மற்றும் முச்சக்கர மிதி வண்டிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக மீனவர்களுக்கு நிதி உதவி திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.

13. மீனவர்களின் கட்டுமரங்களுக்கு இரசாயனப் பூச்சு பூசுதல் - மறு ஆய்வு செய்தல்.

14. கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்களுக்கான நிதி உதவி திட்டத்திற்கு திட்டமிடுதல், மறு ஆய்வு.

15. மீனவர் தொகுதி காப்புறுதி திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.

16. மீனவர் சேமிப்பு நிவாரண திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.

(அரசாணை எண்.238, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 16.10.97)

## 5. உணவு பதப்படுத்துதல் உட்பட சிறு தொழில்கள்

1. தொழிற்பேட்டைகளையும் வளர்ச்சி நிலையங்களையும் அமைத்தல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்
2. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்
3. பிற்பட்ட பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைத்தல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்
4. தொழில் இயக்குநரால் கட்டுப்படுத்தப்படும் பிற குழுவினருக்குக் கடன்கள் அளித்தலில் அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல்
5. பொது வசதிகளை அமைத்தல் தொடர்பாக உதவி செய்தல்

**(அரசாணை எண்.75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 24.4.98)**

## 6. கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்

1. கதர், ஊரகத் தொழில்கள், பட்டுவளர்ப்பு, கைத்தொழில்கள் முதலியவற்றிற்கான வளர்ச்சிக்கு மாவட்ட அளவிலான திட்டத்தை உருவாக்குதல் மற்றும் இவைகளுக்காக பயிற்சியளிக்க பொருத்தமான பயிற்சி நிலையங்களைக் கண்டறிதல்

(அரசாணை (நிலை) எண். 75 ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 7. ஊரக வீட்டு வசதி

1. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டுமனை ஒதுக்கீடு - திட்டமிடுதல், ஆய்வு

2. தமிழ்நாடு ஊரக வீட்டு வசதித் திட்டம் - திட்டமிடுதல், ஆய்வு.

3. ஊரகப் பகுதிகளில் இருப்பிடத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் - திட்டமிடுதல், ஆய்வு.

4. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் - திட்டமிடுதல், மேற்பார்வையிடுதல்.

5. ஆதிதிராவிடர் வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிடப் பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டம் - திட்டமிடுதல், ஆய்வு.

6. பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினா ஆகியோருக்கான வீட்டு வசதி திட்டங்கள் - திட்டமிடுதல், ஆய்வு.

(அரசாணை (நிலை) எண். 340, ஊரக வளர்ச்சி துறை நாள். 3.12.97)

## 8. குடிநீர் வசதி

1. பெரிய குடிநீர் வழங்கல் திட்டங்களைக் கண்டறிந்து அதற்கான திட்டங்களை உருவாக்கல்.

(அரசாணை(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 9. சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து தொடர்புகள்

1. மாவட்டத்திலுள்ள சாலைகளை மேம்படுத்த திட்டமிடல்

2. மாவட்டத்தில் செயல்படும் அனைத்து சாலை வளர்ச்சி திட்டங்களை ஆய்வு செய்தல்

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 10. ஊரக மின்மயமாக்கல்

1. மாவட்டத்தில் ஊரக மின்மயமாக்கல் சம்பந்தமான அனைத்து அரசுத் திட்டங்களையும் நிறைவேற்றல் மற்றும் ஆய்வு செய்தல், (கண்காணிப்புப் பொறியாளர்கள் இந்த ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்.)

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 11. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்

1. மாவட்டத்தில் நிறைவேற்றப்படக்கூடிய, தகுதிவாய்ந்த மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பற்றி அரசுக்கு ஆலோசனைகள் வழங்கல்.

2. மரபு சாரா எரிபொருள் சாதனங்கள் தயாரிப்பாளர்கள் மற்றும் உபயோகிப்பாளர்களுடன் மாவட்ட அளவிலான பயிற்சி மாநாடுகள் ஏற்பாடு செய்தல்

3. மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் இது சம்பந்தமான திட்டங்களை ஆய்வு செய்தல்.

(அரசாணை நிலை எண்.75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 12. கல்வி, தொடக்கக்கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி

1. பள்ளிக்கூட கட்டிடம், கழிப்பறைகள் ஆகியவற்றை பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல், குடிநீர்வசதி செய்து தருதல் போன்றவற்றை கவனித்தும், பள்ளிகளை பார்வையிட்டு உதவித் தொடக்க கல்வி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்புதல்

2. படிப்பகங்கள் திறக்கலாம்.

(அரசாணை நிலை எண்.248 பள்ளி கல்வித் துறை, நாள் 11.6.97)

## 13. தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கை தொழில் கல்வி

1. மாவட்டத்தில் தொழில் நுட்ப பணியாளர் தேவைகளுக்கான திட்டம் தயாரித்தல்

2. மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்படுதலை ஆய்வு செய்தல்

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை நாள். 14.3.97)

## 14. நூலகங்கள்

1. மாவட்டத்தில் புது நூலகங்களையும், படிப்பகங்களையும் திறக்க உள்ளூர் நூலக ஆணைக் குழுவிற்கு ஆலோசனை கூறல்

2. மாவட்ட ஊராட்சியின் ஒரு உறுப்பினரை மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்கு தேர்ந்தெடுத்து அனுப்புதல்

3. நூலகத்தில் படிக்கும் வழக்கத்தை மேம்படுத்த தீவிர திட்டம் உருவாக்கல்

(அரசாணை நிலை எண். 75, ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97)

## 15. பண்பாடுகள்

1. கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு உதவியளித்தல் திட்டத்தை ஆய்வு செய்தல்.

2. ஜவகர் சிறுவனர் இல்லத்திற்கு உதவியளித்தல் திட்டத்தை ஆய்வு செய்தல்.

3. மாவட்டக் கலைக் கூடங்களையும் கலைமன்றங்களையும் நிறுவுதல் திட்டத்தை ஆய்வு செய்தல்.

4. இசைப் பள்ளியை நிறுவுதல் - பயனாளிகளைக் கண்டறிதல், ஆய்வு.

(அரசாணை நிலை எண்.297, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 29.9.97)

## 16. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

1. பொது அங்காடிகள் - அறிவுரை வழங்குதல், ஆய்வு.

2. தனியார் அங்காடிகள் - அறிவுரை வழங்குதல், ஆய்வு.

3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் - அறிவுரை வழங்குதல்.

4. தொடக்க கூட்டுறவு அங்காடி - அறிவுரை வழங்குதல், ஆய்வு.

(அரசு ஆணை எண்.297 ஊரக வளர்ச்சித் துறை நாள். 29.9.97)

## 17. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள்

1. மாவட்ட/வட்ட தலைமையக மருத்துவமனைகளை மேம்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - திட்டமிடல், ஆய்வு.

2. காசநோயைக் கட்டுபடுத்தல், மலேரியா நோய் ஒழிப்பு, உயிர்க்கொல்லி நோய், எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துதல், தொழுநோயைக் கட்டுப்படுத்துதல், போன்ற தேசீய சுகாதார திட்டங்களை மேற்பார்வையிடுதல் (மாநிலத் திட்டம், மத்திய தனித் திட்டம்) - திட்டமிடல், ஆய்வு.

3. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மருந்தகங்களை ஏற்படுத்துதல் (மாநிலத் திட்டம்) திட்டமிடல், ஆய்வு.

4. தொலைதூரப் பகுதிகளில் இயங்கும் நடமாடும் மருத்துவப் பிரிவுகளின் பயனுக்கான நிதியுதவி (மாநிலத் திட்டம்) - திட்டமிடல், ஆய்வு.

5. நோய்களை கட்டுப்படுத்துதல்/தடுத்தல் ஆகிய நடவடிக்கைகளில மக்களை ஈடுபடச் செய்தல் (மாநிலத் திட்டம்) - திட்டமிடல், ஆய்வு.

6. மாவட்ட அளவில் சித்த/ஆயுர்வேதா/யுனானி மருத்துவத்தை மேம்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - திட்டமிடல், ஆய்வு.

7. மருத்துவமனை கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான உதவி (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

8. கண்சிகிச்சை முகாம்கள், குடும்பநல முகாம்கள் முதலியவற்ற ஏற்படுத்துவதில் தொண்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) - நிர்வாகம், பராமரிப்பு.

9. தொடக்கச் சுகாதார மையங்கள்/மகப்பேறு மையஙகள் ஆகியவற்றின் கட்டுமானம்/மேற்பார்வை/ பராமரிப்பு (மாநிலத் திட்டம்) - திட்டமிடல், ஆய்வு.

10. தூய்மையான சுற்றுப்புறச் சூழலின் முக்கியம் குறித்தும், நோய்களைக் கட்டுப்படுத்துவது குறித்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - உதவி, நிர்வாகம், பராமரிப்பு.

11. தொடக்கச் சுகாதார மையங்களில், பலநோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்ான பயிற்சிகளை நடத்துவதற்கு நிதியுதவி (மாநிலத் திட்டம்) - திட்டமிடல், ஆய்வு.

12. இளம்பிள்ளை வாதம், தொண்டை அடைப்பான் போன்றவற்றிற்கு எதிராக பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் தடுப்பூசி போட உதவி (மாநிலத் திட்டம்) - மேற்பார்வையிடல், திட்டமிடல்.

13. பள்ளி சுகாதாரத் திட்டம் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு, ஆலோசனை வழங்குதல்.

14. பிறப்பு - இறப்புப் புள்ளிவிவரங்களைப் பதிவு செய்வதை மேம்படுத்துதல் (மாநிலத் திட்டம்) - செயற்படுத்துதல், ஆலோசனை வழங்குதல்.

15. துப்புரவுப் பணிகள் (மாநிலத் திட்டம்) - திட்டமிடல்/ஆய்வு.

(அரசாணை நிலை எண்.220, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 4.7.97)

## 18. குடும்பநலம்

1. குடும்ப நல மையங்களை அமைத்து, பராமரித்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டத்திற்கு திட்டமிடல், மறு ஆய்வு, மேற்பார்வையிடல்.

2. வட்டார குடும்ப நல பயிற்சி மையம்/மாவட்ட குடும்ப நல அமைப்பு ஆகியவற்றை அமைத்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டங்களை ஆய்வு, மேற்பார்வையிடல்.

3. குடும்பநலத் திட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றை ஈடுபடச் செய்தல் (மாநிலத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டத்தின் நிர்வாகம், பராமரிப்பு, ஆய்வு.

4. குடும்ப நலம் குறித்து பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்) திட்டத்தை ஆய்வு செய்தல்.

5. குடும்பநலத் திட்டம் குறித்து மக்களுக்கு கல்வி புகட்ட நிதியுதவி/ஆண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை திட்டத்தின் நிர்வாகம், பராமரிப்பு, ஆய்வு.

(அரசாணை நிலை எண்.220, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 4.7.97)

## 19. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

1. சத்துணவு மையங்களை ஏற்படுத்தி நிருவகித்து மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

2. ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டுத் திட்டம்/துணை ஊட்டச் சத்துத் திட்டம் (மத்திய அரசு பொறுப்பேறுகும் திட்டம்) - மறு ஆய்வு.

3. பள்ளிகள் ஒருங்கிணைந்த குழந்தைநல மேம்பாட்டுத் திட்ட மையங்கள் முதலியவற்றில் சததுணவுத் திட்டத்தை செயற்படுத்துதல் (மாநிலத் திட்டம்/மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்/வெளிநாடு உதவி பெறும் திட்டம்) - மறு ஆய்வு.

4. பால்வாடிகள் மற்றும் பாலர் பள்ளிகள் தொடங்குதல் திட்டத்தை மறு ஆய்வு.

5. சிசுக் கொலையை ஒழிக்கும் திட்டம் மற்றும் கைவிடப்பட்ட பெண் குழந்தைகளை பாதுகாத்தல் வளர்த்தல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

6. மகளிருக்கான பணி நிலையங்களையும் உற்பத்தி பிரிவுகளையும் மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

7. உழைக்கும் மகளிர் இல்லங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - பார்வையிடல்.

8. வாழ்க்கை தொழில் பயிற்சி, ஏழை விதவைத் தாயின் குழந்தைகள், ஏழை விதவையின மகளின் திருமணத்திற்கு உதவி, அனாதை பெண்கள் ஆகியோருக்கு உதவியளித்தல் பேன்ற பல்வேறு மகளிர் நலத் திட்டங்களை மேற்பார்வை செய்ல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

9. மகளிர் மற்றும் அதன் பொருளாதார நடவடிக்கைகள் குறித்த திட்டம் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

10. பணிக்கு செல்லும் மற்றும் உடல்நலம் இல்லாத பெண்களின் குழந்தைகளுக்காக காப்பகங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்/மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்/வெளிநாடு உதவி பெறும் திட்டம்) - மறு ஆய்வு.

11. மாவட்டங்களில் உள்ள மகளிருக்கான தொண்டு இல்லங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

12. மகளிருக்கான அனைத்து நலத் திட்டங்களின் மறு ஆய்வு.

13. மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

14. அனாதை இல்லங்களின் செயற்பாட்டை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

15. வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுவி (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

16. வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள பெண்களின் திருமணத்திற்கான நிதியுவி (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

17. பெண் குழந்தை நலத் திட்டத்திற்கான நிதியுவி (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

18. ஆதரவற்ற கைம்பெண்கள்/கைவிடப்பட்ட மகளிருக்குத் தையல் இயந்திரம் வழங்குதல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

19. ஏழை கைம்பெண்களின் மகளுக்கு திருமண முன்பணம் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

20. ஐ.எப்.எ.டி. திட்டத்தின் (IFAD) கீழ் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (வெளிநாடு உதவி பெறும் திட்டம்) - மறு ஆய்வு.

21. முதியோர் இல்லங்களின் செயல்பாடு குறித்த திட்டங்களை மறு ஆய்வு.
(அரசாணை நிலை எண்.2, சமூகநலம் (மற்றும்) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5.1.98)

## 20. மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்டம்

1. பார்வையற்றோருக்கான/ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு இல்லங்களில் செயல்பாட்டை மேற்பார்வையிடல் - மறு ஆய்வு.

2. உடல் ஊனமுற்றோருக்காக நடத்தப்படும் பள்ளிகள்/விடுதிகள் ஆகியவற்றை மேற்பார்வையிடல் - மறு ஆய்வு.

3. ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை - மறு ஆய்வு.

4. கல்வி நிலையங்கள், அரசுத் துறைகளில் உடல் ஊனமுற்றோருக்கு இட ஒதுக்கீடு செயற்படுத்துவதை மேற்பார்வையிடல் - மறு ஆய்வு.

5. ஒருங்கிணைந்த இளம்பிள்ளை வாத ஒழிப்புத் திட்டத்திற்கு நிதியுதவி - மறு ஆய்வு.

6. உடல் ஊனமுற்ற/மனநலக்குன்றிய குழந்தைகளின் மறுவாழ்வுக்காக அரசு சாராத அமைப்புகளுக்கு உதவி - மறு ஆய்வு.

7. உடல் ஊனமுற்றோர்க்கான (பார்வையின்படி) காது கேளாமை, வாய் பேசாமை புதிய பள்ளிகள் தொடங்குதல் - மறு ஆய்வு.

8. வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பார்வையற்ற வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பினை வழங்கல் (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

9. பார்வையற்ற மாணவர்களுக்கு எழுத்தர் உதவி (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

10. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை (மாநிலத் திட்டம்) - மறு ஆய்வு.

11. தொழிற்பயிற்சி பள்ளிகளில், சீர்திருத்த பள்ளிகளிலிருந்து விடுபட்ட மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான உதவி - மறு ஆய்வு.

12. சமுதாயத்திற்கு தீங்கு பயக்கும் இளங்குற்றவாளிகளைத் தடுத்து கட்டுப்படுத்தி நன்னெறிப்படுத்தும் திட்டங்கள் - மறு ஆய்வு.

13. சீர்திருத்த இல்லங்கள் விழிப்புப்பணி நிறுவனங்கள், சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் - மறு ஆய்வு..

(அரசாணை நிலை எண்.2, சமூகநலம் (மற்றும்) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5.1.98)

## 21. பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் நலம்

1. பட்டியல் இன மற்றும் பழங்குடியினர் நலனுக்குகாகச் செயற்படுத்தப்பட்டுவரும் பிற நலத் திட்டங்களை மேற்பார்வையிடுதலை திட்டமிடல் மற்றும் மேற்பார்வையிடல்.

2. இடுகாட்டிற்கும் சுடுகாட்டிற்கும் நடைபாதைகள் அமைத்தலை திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடல்.

3. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கும் வீடுகளுக்கும் மின் வசதி அளித்தலை திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடல்.

4. சமூக நலத் துறையால் செயற்படுத்தப்படும் கலப்புத் திருமணத்திற்கு பரிசு திட்டத்தை திட்டமிடல் மற்றும் மேற்பார்வையிடல்.

5. சிறு வியாபாரிகளுக்கு உதவி திட்டத்தை திட்டமிடல் மற்றும் மேற்பார்வையிடல்.

6.பட்டியல் இன மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ள கல்வி சலுகைகளை (புத்தகங்கள், சீருடைகள் மற்றும் படிப்புதவி தொகைகள் முதலியன ) மேற்பார்வையிடலில் சீருடை தைத்து தருவதைச் செயற்படுத்துதல் மற்றும் ஏடுகள், பாடநூல்கள், சீருடை வழங்கல் பணிகளை கண்காணித்தல்.

7. சமுதாயக் கூடம் மற்றும் துணி வெளுக்கும் இடங்கள் முதலியவற்றை கட்டுதலை திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடல்.

8. 1955 ஆம் ஆண்டு குடியிரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் நடைமுறைப்பபடுத்துதலை திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடல்.

9. பொதுமக்களிடம் தீண்டாமை ஒழிப்பைப் பரப்புதலை திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடல்.

10. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தலை திட்டமிடுதல், மேற்பார்வையிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

11. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்களுக்குப் பயிற்சித் திட்டமும் சிறப்புப் பயிற்சி அளித்தலை திட்டமிடல் மற்றும் மேற்பார்வையிடல்.

12. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கலை திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடல்.

**(அரசாணை எண்.77, ஊரக வளர்ச்சி, நாள் 25.4.98)**

## 22. பொது பகிர்வு முறை

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைகளை பார்வையிடுதல், குறைகள் ஏதும் காணப்பட்டால், மாநில மற்றும் வருவாய் கோட்ட அளவிலான அமைப்புகளுக்கு தெரிவித்தல்

(அரசாணை எண்.203, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (எப்.1) துறை, நாள் 29.7.97)

## 23. சமுதாய சொத்துக்கள் பேணுதல்

1. அடையாளம் காணல், பதிவு செய்தல், வீதங்களை அறுதியிடல், சமுதாயச் சொத்துக்களுக்கானப் பயன்படுத்துவோர் கட்டணங்கள் - பார்வையிடல்.

2. விற்பனை, குத்தகை, மாற்றம் ஆகியவற்றுக்கான கருத்துரு வழங்கல் - ஆய்வு, மேற்பார்வையிடல்.

3. தவறாகப் பயன்படுத்துதல், ஆக்கிரமிப்பு சேதம் மற்றும் இழப்பிற்கு எதரான பாதுகாப்பு - ஆய்வு, மேற்பார்வையிடல்.

4. தொண்டு நிறுவனங்களின் பங்கு - திட்டமிடுதல்.

(அரசாணை நிலை எண்.297, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 29.9.97)